This Question Paper consists of 25 questions and 12 printed pages.
இந்த வினாத்தாளில் 25 வினாக்களும், 12 அச்சிடப்பட்ட பக்கங்களும் உள்ளன.

Roll No. பதிவெண் :		**Code No. 62/S/N/TM** குறியீடு எண் : **Set - A**

ACCOUNTANCY
(கணக்குப் பதிவியல்)
(224-TM)

Day and Date of Examination
(தேர்வு நாள்) : ______________________

Signature of Invigilators 1. ______________________
(தேர்வு மேற்பார்வையாளர்களின் கையொப்பங்கள்) : 2. ______________________

General Instructions :

1 Candidate must write his/her Roll Number on the first page of the Question Paper.

2 Please check the Question Paper to verify that the total pages and the total number of questions contained in the Question Paper are the same as those printed on the top of the first page. Also check to see that the questions are in sequential order.

3 For the objective type of questions, you have to choose any **one** of the four alternatives given in the question i.e. (A), (B), (C) or (D) and indicate your correct answer in the Answer-Book given to you.

4 All the questions including objective type questions are to be answered within the allotted time and no separate time limit is fixed for answering objective type questions.

5 Making any identification mark in the Answer-Book or writing Roll Number anywhere other than the specified places will lead to disqualification of the candidate.

6 Write your Question Paper code No. **62/S/N/TM-A** on the Answer-Book.

7 The Question Paper is bilingual. In case of doubt, the English version should be considered as authentic.

பொதுவான அறிவுரைகள் :

1 தேர்வர் தனது வினாத்தாளின் முதற்பக்கத்தில் தனது பதிவெண்ணை எழுதிட வேண்டும்.

2 முதற்பக்கத்தின் மேற்பகுதியில் குறிப்பிட்டுள்ளவாறு மொத்த பக்கங்கள், வினாக்களின் மொத்த எண்ணிக்கை ஆகியவை வினாத்தாளில் உள்ளனவா என்பதை தயவு செய்து சரிபார்த்துக் கொள்க.

3 பலவுள் தெரிவு (objective type) வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள (A), (B), (C) மற்றும் (D) ஆகிய நான்கு மாற்று விடைகளில் உங்களுடைய விடையைக் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.

4 பலவுள் தெரிவு வினாக்கள் உள்ளிட்ட அனைத்து வினாக்களுக்கும் அனுமதிக்கப்பட்ட காலவரம்புக்குள் விடையளித்திட வேண்டும். பலவுள் தெரிவு வினாக்களுக்கென தனியாக கூடுதல் நேரம் அனுமதிக்கப்படவில்லை.

5 விடைப்புத்தகத்தில் பதிவெண்ணுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் பதிவெண்ணைக் குறிப்பதோ, வேறு அடையாளக் குறிகளிடுவதோ கூடாது. அவ்வாறு செய்தால் உங்கள் தேர்வு செல்லத்தக்கதாகாது.

6 உங்களது வினாத்தாளின் பதிவு எண் **62/S/N/TM-A** ஐ விடைத்தாளில் எழுதவும்.

7 ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டால் ஆங்கிலத்தில் கொடுத்துள்ளதை சரிபார்த்து விடையளிக்கவும்.

ACCOUNTANCY
(கணக்குப் பதிவியல்)
(224-TM)

Time : **3** Hours] [Maximum Marks : **100**

நேரம் : 3 மணி] **[மொத்த மதிப்பெண்கள் : 100**

Note : (1) Answer **all** the questions.

(2) Marks allotted for each question are indicated against it.

குறிப்பு : (1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

(2) ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண் அதன் எதிரிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

---

1 Which of the following is not an item of revenue ? **1**

(A) Interest received (B) Commission received

(C) Sale of Assets (D) None of these

பின்வருவனவற்றுள் எது வருவாயினம் இல்லை?

(A) வட்டி பெற்றது (B) கழிவு பெற்றது

(C) சொத்துக்கள் விற்றது (D) மேற்சொன்னது ஏதும் இல்லை

2 What is the effect of "Accrued Income" on the Accounting equation ? **1**

(A) Increase in asset and capital

(B) Increase in asset and decrease in capital

(C) Decrease in asset and increase in capital

(D) Decrease in asset and capital

"பெறப்படவேண்டிய வருமானம்" - இதன் கணக்கியல் சமன்பாடு மீதான விளைவு என்ன?

(A) சொத்து மற்றும் முதல் அதிகரித்தல்

(B) சொத்து அதிகரித்தல் மற்றும் முதல் குறைதல்

(C) சொத்து குறைதல் மற்றும் முதல் அதிகரித்தல்

(D) சொத்து மற்றும் முதல் குறைதல்

3 Which of the following errors will be disclosed by Trial Balance ? 1

(A) Wrong casting (B) Compensating errors

(C) Errors of Principle (D) Errors of complete ommission

பின்வரும் பிழைகளில் இருப்பாய்வால் வெளிக்காட்டப்படும் பிழை எது?

(A) தவறான கூட்டுதல் (B) ஈடுசெய் பிழைகள்

(C) விதிப்பிழைகள் (D) முழுவிடு பிழைகள்

4 Depreciation is charged on: 1

(A) liquid assets (B) current assets

(C) ficticuous assets (D) fixed assets

எதன் மேல் தேய்மானம் சுமத்தப்படுகிறது

(A) நீர்மைச் சொத்துகள் (B) நடப்புச் சொத்துகள்

(C) கற்பனைச் சொத்துகள் (D) நிலையான சொத்துகள்

5 Which of the following financial statement is prepared to ascertain the financial position of the business ? 1

(A) Trading account (B) Balance sheet

(C) Profit and loss account (D) None of these

ஒரு வணிக நிறுவனத்தின் நிதி நிலையைக் கண்டறிய, பின்வரும் நிதிநிலை அறிக்கைகளில், தயாரிக்கப்படுவது எது?

(A) வியாபாரக் கணக்கு (B) இருப்பு நிலைக் குறிப்பு

(C) இலாப-நட்டக் கணக்கு (D) மேற்கண்டவை ஏதும் இல்லை

6 We would use short cut key F1 for: 1

(A) Date and Period (B) Company and Company information

(C) Features (D) Select and Shut companies

"F1" என்ற குறுக்கு வழிப் பொத்தான் பயன்படுத்துவது இவற்றில் எதற்கு?

(A) தேதி மற்றும் காலம் (B) நிறுமம் மற்றும் நிறுமத் தகவல்கள்

(C) சிறப்புகள் (Features) (D) Select மற்றும் Shut companies

7 Define accounting. Write any two objectives of it. **3**

கணக்கியலை வரையறு. அதன் நோக்கங்களில் ஏதேனும் இரண்டை எழுது

8 Explain the fundamental rules of debit and credit for different types of accounts on the basis of Traditional classification. **3**

கணக்குகளை மரபு முறையில் வகைப்படுத்தி அடிப்படைப் பற்று வரவு விதிகளை விளக்குக.

9 What is meant by Ledger ? Why is it prepared ? **3**

பேரேடு என்றால் என்ன? ஏன் அது தயாரிக்கப்படுகிறது?

10 State any three objectives of preparing Balance Sheet. **3**

இருப்பு நிலைக்குறிப்பு தயாரிப்பதன் நோக்கங்களில் ஏதேனும் மூன்றினைக் கூறுக.

11 Write any three important features of Tally. **3**

Tally-ன் முக்கிய இயல்புகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக.

12 Journalise the following transactions. **4**

10th March 2018 - Started business with cash Rs. 1,00,000

13th March 2018 - Credit sales to Hari Rs. 25,000

20th March 2018 - Rent received Rs. 3,000

25th March 2018 - Drawing of cash for personal use Rs. 3,000

பின்வரும் நடவடிக்கைகளைக் குறிப்பேட்டில் பதிவு செய்க:

2018 மார்ச் 10 - ரொக்கம் ரூ. 1,00,000 உடன் தொழில் தொடங்கியது

2018 மார்ச் 13 - ஹரிக்கு கடன் விற்பனை ரூ. 25,000

2018 மார்ச் 20 - வாடகை பெற்றது ரூ. 3,000

2018 மார்ச் 25 - சொந்த உபயோகத்துக்காக ரொக்கம் எடுத்தது ரூ. 3,000

13 Distinguish between Journal and Ledger on any four bases. **4**

ஏதேனும் நான்கு அடிப்படைகளில் குறிப்பேட்டையும், பேரேட்டையும் வேறுபடுத்துக.

14 State the meaning and significance of money measurement concept. **5**

பணமதிப்பீட்டுக் கருத்தின் பொருள் மற்றும் முக்கியத்துவத்தைக் கூறுக.

15 Define book-keeping. State the need of book-keeping with any four points. **5**

கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு, அதன் தேவைகளில் ஏதேனும் நான்கைக் கூறுக.

16 On 1st July 2015, XYZ Company Ltd., purchased a plant for Rs. 5,00,000. **5**

On 31st December 2016, this plant was completely destroyed and Rs. 4,00,000 were received from Insurance company in full settlement. On the same date, another plant was purchased by the company for Rs.8,00,000. The company writes off 20% depreciation p.a. on diminshing balance method. Give the plant account from 2015 to 2017. Assume books are closed on 31st December every year.

XYZ கம்பெனி லிமிடெட், 2015 ஜீலை 1 அன்று ரூ. 5,00,000 -த்துக்கு ஒரு பொறி இயந்திரத்தை வாங்கியது. அப்பொறி இயந்திரமானது, 2016 டிசம்பர் 31 -ம் நாளன்று முழுவதுமாக அழிந்து போனதன் விளைவாக, காப்பீட்டு நிறுமத்திடமிருந்து ரூ 4,00,000 பெறப்பட்டது. அதே நாளில், ரூ. 8,00,000 மதிப்புள்ள மற்றொரு பொறி இயந்திரத்தை வாங்கியது. ஆண்டுக்கு 20% தேய்மானம் குறைந்து செல் மதிப்பு முறையில் கணக்கிடப்பட்டது. கணக்கேடுகள் டிசம்பர் 31 -அன்று முடிக்கப்படுவதாகக் கொண்டு, 2015 முதல் 2017 முடிய, பொறி இயந்திரக் கணக்கைத் தயாரிக்கவும்.

17 What is Journal Proper ? Describe the transactions that are recorded in it. **5**

முறையான குறிப்பேடு என்றால் என்ன? அதில் பதிவு செய்யப்படும் நடவடிக்கைகளை விவரிக்க.

18 Differentiate between Manual accounting and Computerised accounting system. **5**

கைவழிக்கணக்கியலுக்கும், கணினி மயமாக்கப்பட்ட கணக்கியலுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் கூறுக.

19 Classify the following assets into current assets, tangible assets, intangible assets and wasting assets. **6**

Mines, Building, Bills receivable, Oil wells, Goodwill, Furniture, Trade marks, Cash in hand, Quarries, Plant stock, Patents.

பின்வரும் சொத்துக்களை நடப்புச் சொத்துகள், புலனாகும் சொத்துகள், புலனாகாச் சொத்துக்கள் மற்றும் வீணாகும் சொத்துகள் என வகைப்படுத்தவும்:

சுரங்கம், கட்டடம், பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள், எண்ணெய் கிணறுகள், நட்பெயர், அறைகலன், வாணிகக் குறியீடுகள், கையிருப்பு ரொக்கம், கற்சுரங்கங்கள், பொறி இயந்திரம், சரக்கிருப்பு, காப்புரிமை.

20 Bank pass book of M/s Kalinga Traders showed a credit balance of Rs. 75,000 on 31st March 2018. The following differences were found on that date between the cash book and pass book balances. **6**

(1) Cheques issued before 31st March 2018, amounting to Rs. 42,000 had not been presented for payment.

(2) Two cheques of Rs. 5,000 and Rs. 3,800 were deposited into bank on 31st March but the bank credited the same in April.

(3) Insurance premium directly paid by bank of Rs. 6,000.

(4) Rs. 2,500 wrongly debited to the firm account by the bank.

Prepare Bank Reconciliation statement as on 31-03-2018.

கலிங்கா டிரேடர்ஸ் நிறுவனத்தின் வங்கி செல்லேடு 2018 மார்ச் 31 அன்று ரூ. 75,000 வரவு இருப்புத்தொகை காட்டியது. ரொக்க ஏட்டுக்கும், வங்கி செல்லேட்டுக்கும் இடையேயான பின்வரும் வேறுபாடுகள் கண்டறியப்பட்டன:

(1) காசோலைகள் மார்ச் 31, 2018 -க்கும் முன்பாகவே வெளியிடப்பட்டு இன்னும் வங்கியில் செலுத்தப்படாமல் உள்ளவை ரூ. 42,000

(2) மார்ச் 31 -அன்று ரூ. 5,000 மற்றும் ரூ. 3,800 மதிப்புள்ள காசோலைகள் வங்கியில் செலுத்தப்பட்டும், வங்கியால் ஏப்ரல் மாதத்தில் தான் வரவு வைக்கப்பட்டன.

(3) வங்கியால் நேரடியாக செலுத்தப்பட்ட காப்பீடு ரூ. 6,000

(4) ரூ. 2,500 வங்கியால் தவறாக இந்நிறுவனத்தின் வங்கிக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

31.03.2018 -ம் நாளன்று வங்கிச் சரிக்கட்டும் பட்டியலைத் தயாரிக்கவும்.

21 Prepare a Petty Cash Book under imprest system for the month of August 2018. **6**

August 2018

1	Drew imprest from the main cashier	Rs. 500
3	Bought postage stamps	Rs. 20
5	Paid for cleaning charges	Rs. 40
8	Paid town bus fare	Rs. 30
12	Paid for Cartage	Rs. 65
13	Travelling expenses paid	Rs. 25
14	Paid for stationery	Rs. 30
18	Telephone expenses paid	Rs. 100
22	Paid for repairs	Rs. 60

2018 ஆகஸ்ட் மாதத்திற்கான சில்லறை ரொக்க ஏட்டை முன்பண மீட்பு முறையில் தயாரிக்கவும்.

2018 ஆகஸ்ட்		தொகை ரூ.
1	தலைமைக் காசாளரிடமிருந்து மீட்பு முன்பணம் பெற்றது	500
3	அஞ்சல் தலைகள் வாங்கியது	20
5	துப்புரவுக் கட்டணம் செலுத்தியது	40
8	நகரப் பேருந்துக் கட்டணம் செலுத்தியது	30
12	வண்டிக் கட்டணம் செலுத்தியது	65
13	பயணச் செலவுகள் செலுத்தியது	25
14	எழுது பொருளுக்குச் செலுத்தியது	30
18	தொலைபேசிக் கட்டணம் செலுத்தியது	100
22	பழுதுபார்ப்புக்கு செலுத்தியது	60

22 What do you mean by Trial Balance ? Discuss the limitations of it. **6**

இருப்பாய்வு என்றால் என்ன? அதன் குறைபாடுகளைக் கூறுக.

23 Distinguish between provisions and reserves on any four bases. **6**

ஏதேனும் நான்கு அடிப்படைகளில் ஒதுக்குகளையும், காப்புகளையும் வேறுபடுத்துக.

24 From the following information, prepare a Balance Sheet of Mr. Hritik as on 31-03-2018. **6**

Capital .... Rs. 42,500
Net Profit .... Rs. 5,400
Drawings .... Rs. 1,500
Furniture .... Rs. 10,500
Debtors .... Rs. 2,100
Bills Payable .... Rs. 1,360
Cash in hand .... Rs. 500
Outstanding expenses .... Rs. 1,000
Building .... Rs. 38,000
Investment .... Rs. 4,000
Land .... Rs. 6,000
Creditors .... Rs. 15,000
Bills receivable .... Rs. 2,480
Loan from wife .... Rs. 2,000
Prepaid expenses .... Rs. 180
Closing stock .... Rs. 2,000

பின்வரும் தகவல்களைக் கொண்டு திரு. ஹிரித்திக்கின் 31-03-2018 -ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பைத் தயாரிக்க.

முதல் .... ரூ. 42,500
நிகர இலாபம் .... ரூ. 5,400
எடுப்புகள் .... ரூ. 1,500
அறைகலன் .... ரூ. 10,500
கடனாளிகள் .... ரூ. 2,100
செலுத்துவதற்குரிய மாற்றுச் சீட்டுகள் .... ரூ. 1,360
கையிருப்பு ரொக்கம் .... ரூ. 500
கொடுபடவேண்டிய செலவுகள் .... ரூ. 1,000
கட்டடம் .... ரூ. 38,000
முதலீடுகள் .... ரூ. 4,000
நிலம் .... ரூ. 6,000
கடனீந்தோர் .... ரூ. 15,000
பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் .... ரூ. 2,480
மனைவியிடம் பெற்ற கடன் .... ரூ. 2,000
முன்கூட்டிச்செலுத்திய செலவுகள் .... ரூ. 180
இறுதிச் சரக்கிருப்பு .... ரூ. 2,000

25 From the following Trial Balance and the adjustments, prepare Trading and Profit & Loss Account and Balance Sheet. **10**

Trial Balance

Debit Balances	**Amt. (Rs.)**	**Credit Balances**	**Amt. (Rs.)**
Opening Stock	11,500	Sales	47,500
Purchases	35,500	Capital	39,000
Frieght	2,000	Discount	650
Power & Fuel	1,000	Interest	600
Machinery	20,000	Creditors	6,000
Legal Expenses	1,400	Bills Payable	4,000
Furniture	8,000	Commission	1,000
Investment	4,700	Received divident	1,000
Wages	4,200		
Manufacturing Expenses	600		
Repairs	350		
Printing & Stationery	600		
Octroi	1,050		
Debtors	5,000		
Return onward	1,800		
Trade Expenses	2,050		
	99,750		**99,750**

Adjustments:

(1) Closing stock Rs. 7,500

(2) Wages unpaid Rs. 500

(3) Trade expenses prepaid Rs. 300

(4) Depreciation on machinery and Furniture @ 10% p.a.

பின்வரும் இருப்பாய்வு 21 மற்றும் சரிக்கட்டுதல்களைக் கொண்டு வியாபார, இலாப-நட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக்குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்கவும்

இருப்பாய்வு

பற்று இருப்புகள்	**தொகை ரூ**	**வரவு இருப்புகள்**	**தொகை ரூ.**
தொடக்கச் சரக்கிருப்பு	11,500	விற்பனை	47,500
கொள்முதல்	35,500	முதல்	39,000
ஏற்றிச் செல்லக்		தள்ளுபடி	650
கட்டணம்	2,000	வட்டி	600
ஆலை மின்கட்டணம்		கடனீந்தோர்	6,000
எரிபொருள்	1,000	செலுத்துதற்குரிய	
இயந்திரம்	20,000	மாற்றுச் சீட்டுகள்	4,000
சட்டச்-செலவுகள்	1,400	கழிவு	1,000
அறைகலன்	8,000	வெளித்திருப்பம்	1,000
முதலீடு	4,700		
கூலி	4,200		
உற்பத்திச் செலவுகள்	600		
பழுது பார்ப்பு	350		
அச்சு & எழுது பொருள்	600		
நுழைவு வரி	1,050		
கடனாளிகள்	5,000		
வெளித் திருப்பம்	1,800		
வியாபாரச் செலவுகள்	2,050		
	99,750		**99,750**

சரிக்கட்டுதல்கள்:

(1) இறுதிச் சரக்கிருப்பு 7,500

(2) கொடுபட வேண்டிய கூலி ரூ. 500

(3) முன் கூட்டிச் செலுத்திய வியாபாரச் செலவுகள் ரூ 300 1

(4) இயந்திரம் மற்றும் அறைகலன் மீதான தேய்மானம் @ 10% **p.a**

OR / அல்லது

Write short notes on:

(a) Closing Stock

(b) Prepaid Expenses

(c) Outstanding Expenses

(d) Depreciation

சிறு குறிப்பு வரைக:

(a) இறுதிச் சரக்கிருப்பு

(b) முன் கூட்டிச் செலுத்திய செலவுகள்

(c) கொடுபட வேண்டிய செலவுகள்

(d) தேய்மானம்